# அண்டாவ காணோம் படத்துக்கு தேசிய விருது

### ஜே.எஸ்.கே.சதீஷ்குமார் நம்பிக்கை



▶ அண்டாவ காணோம் ஆடியோ விழாவில்...

சென்னை, ஜூன் 29: ஜே.எஸ்.கே பிலிம் கார்ப்பரேஷன் சார்பில் ஜே.சதீஷ்குமார், லியோ விஷன் ராஜ்குமார் இணைந்து தயாரித்துள்ள படம், அண்டாவ காணோம். ஸ்ரேயா ரெட்டி நடித்துள்ளார். வேல்மதி இயக்கியுள்ளார். அஸ்வமித்ரா இசை அமைத்துள்ளார்.

அண்டாவுக்கு விஜய் சேதுபதி பின்னணி குரல் கொடுத்துள்ளார். இந்தப் படத்தின் இசை வெளியீடு மற்றும் ஜே.எஸ்.கே பிலிம் கார்ப்பரேஷனின் 10ம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது.


'நான் இயக்கிய நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் படத்தை பல பேர் பார்த்தார்கள். நிறைய காட்சிகளை 'கட்' செய்யச் சொன்னார்கள். இதனால், யாரும் அந்தப் படத்தை வாங்கவில்லை. இதையறிந்த சதீஷ்குமார், உடனே படத்தைப் பார்த்தார். 'எதையும் கட் செய்யாமல், அப்படியே ரிலீஸ் செய்யலாம்' என்றார் இயக்குனர் பாலாஜி தரணீதரன்.

'ஒரு படத்தை இயக்கிவிட்டு ரிலீசுக்குக் காத்திருக்கும் இயக்குனர்களுக்கு, அதன் தயாரிப்பாளருடன் முரண் நிச்சயமாக இருக்கும். என்றாலும், சதீஷ்குமாருடன் அந்த முரண் நிச்சயமாக எங்களில் யாருக்குமே இருக்காது. என்ன பிரச்னை என்பதை வெளிப்படையாகச் சொல்லி, நம்மைச் சமாதானப்படுத்தி விடுவார்' என்றார் இயக்குனர் ராம்.

ஜே.எஸ்.கே.சதீஷ்குமார் பேசும்போது, 'ஒரு கிராமத்தில் இருக்கும் 300 பேரை நடிக்க வைக்கப் போகிறேன் என்று சொன்னார், டைரக்டர் வேல்மதி. பிறகு அந்தக் கிராமத்தில் இருந்த அனைவருக்கும் முன்பயிற்சி அளித்து நடிக்க வைத்தார். இந்த ஆண்டு தேசிய விருது பட்டியலில் அண்டாவ காணோம் இடம்பிடிக்கும். எனது நிறுவனம் வெளியிட்ட 3 படங்களுக்கு தேசிய விருது கிடைத்திருக்கிறது. இதுவரை 10 இயக்குனர்கள், 7 இசையமைப்பாளர்களை அறிமுகப்படுத்தியுள்ளேன்' என்றார்.

## கல்வித்துறையிலுள்ள அரசியலைப் பேசும் படம்

### ஸ்ரத்தா ஸ்ரீநாத்



**சென்னை, ஜூன் 29:** கன்னடத்தில் யூ டர்ன், தமிழில் காற்று வெளியிடை ஆகிய படங்களில் நடித்தவர், ஸ்ரத்தா ஸ்ரீநாத். நாளை ரிலீசாகும் இவன் தந்திரன் படத்தில், கவுதம் கார்த்திக் ஜோடியாக நடித்துள்ள அவர் கூறியதாவது:

இவன் தந்திரன் படத்தில் நடிக்க, டைரக்டர் கண்ணன் என்னை ஸ்கிரீன் டெஸ்ட் எடுத்தார். அப்போது கடினமான சில காட்சிகளில் நடித்து தேர்வானேன். நான் ஏற்றுள்ள ஆஷா கேரக்டர் மிகவும் வித்தியாசமானது. கடினமாக உழைத்து, கஷ்டப்பட்டு முன்னேறிய மிடில்கிளாஸ் பெண்ணாக நடித்துள்ளேன். நீளமான வசனம் பேசி, உணர்வுப்பூர்வமான காட்சிகளில் நடித்தது மிகப் பெரிய சவாலாக இருந்தது. இங்குள்ள கல்விமுறையும், அதிலிருக்கும் அரசியலும் என்னை எப்படி பாதிக்கிறது என்பது கதையின் ஒரு பகுதி. கவுதம் கார்த்திக் மிகச்சிறந்த கோ-ஆர்ட்டிஸ்ட். அமைதியானவர், யாருடனும் எளிதில் பழக மாட்டார். ஒருவேளை பழகிவிட்டால், உண்மையான நண்பராக இருப்பார். நன்றாக நடித்தால் பாராட்டுவார்.

## அம்பிகா மகன் ஹீரோ



அம்பிகாவுக்கு 2 மகன்கள். அதில் ஒருவர், ராம் கேசவ். விரைவில் இவர் தமிழ் மற்றும் மலையாளத்தில் உருவாகும் படத்தில் ஹீரோவாக அறிமுகமாகிறார். 'என் மகனை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்துவதில் பெருமைப்படுகிறேன். படத்தைப் பற்றிய விவரங்கள் விரைவில் வெளியாகும்' என்றார்.

## நாளை 8 படங்கள் ரிலீஸ்


வழக்கம்போல் இந்த வாரமும் அதிக படங்கள் ரிலீசாகின்றன. இவன் தந்திரன், நெஞ்சம் மறப்பதில்லை, காதல் காலம், யானும் தீயவன், இவன் யாரென்று தெரிகிறதா, அதாகப்பட்டது மகாஜனங்களே, எங்கேயும் நான் இருப்பேன், எவனவன் என நாளை 8 படங்கள் ரிலீசாகின்றன.

### ஜூலை 1 முதல்

## தியேட்டர் கட்டணம் ₹153

**சென்னை, ஜூன் 29:** ஜிஎஸ்டி வரி விதிப்பின்படி தமிழகத்தில் நாளை மறுநாள் (ஜூலை 1) முதல் தியேட்டர் கட்டணம் உயர்கிறது.

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) நாளை மறுநாள் முதல் அமலாகிறது. சினிமாவை பொருத்தவரை 100 ரூபாய்க்கு மேல் டிக்கெட் கட்டணம் இருந்தால் 28 சதவீதமும் 100க்கு கீழே உள்ள கட்டணத்துக்கு 18 சதவீதமும் வரி விதிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இது தொடர்பாக ஆலோசிக்க தமிழ் திரைப்பட வர்த்தக சபையின் கூட்டம் அதன் தலைவர் அபிராமி ராமநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழகத்தில் ஜூலை 1 முதல் தியேட்டர் கட்டணம் எப்படி வசூலிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன்படி தற்போது ரூ.120 ஆக உள்ள கட்டணம், ரூ.153 ஆக உயர்த்தப்படுகிறது. ரூ.100 கட்டணம் ரூ.120 ஆக உயர்த்தப்படுகிறது. ரூ.50 முதல் ரூ.80 வரை விற்கப்படும் டிக்கெட்டின் விலையில் இனி ரூ.10 கூடுதலாக வசூலிக்கப்படும். ரூ.90 டிக்கெட் விலை, ரூ.110 ஆக உயர்த்தப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.



## 100 அடி உயர பலூன்களில் 2.0

ரஜினிகாந்த் நடித்த கபாலி படத்துக்கு, விமானத்தின் மீது ஸ்டிக்கர் ஒட்டி புதுமையாக விளம்பரம் செய்யப்பட்டது. இப்போது ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், எமி ஜாக்சன் நடிக்கும் 2.0 படம், வரும் ஜனவரி மாதம் ரிலீசாகிறது. ஏ.ஆர்.ரகுமான் இசை அமைக்கிறார். இந்தப் படத்தின் விளம்பரங்கள், வெப்பக்காற்று அடங்கிய 100 அடி உயர பலூன்களில் இடம் பெறுகிறது. இந்த பலூன்கள் உலகம் முழுவதும் நடக்கும் பலூன் திருவிழாக்களில் பறக்க விடப்படுகின்றன.

## மெர்சலில் ஜி.வி.பிரகாஷ்

அட்லி இயக்கத்தில் விஜய் 3 கெட்டப்புகளில் நடிக்கும் மெர்சல் படத்தின் இறுதிக்கட்ட ஷூட்டிங் நடந்து வருகிறது. இந்தப் படத்துக்காக, தன் மாமா ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஜி.வி.பிரகாஷ் குமார் ஒரு பாட்டு பாடியிருக்கிறார். 'ஏற்கனவே ரகுமான் இசையிலும் மற்றும் விஜய் படத்துக்கும் பாடியிருக்கிறேன். என்றாலும், இந்தப் பாடல் செம மெர்சலாக இருக்கும். பாடி முடித்ததும் ரகுமான் பாராட்டினார். கேட்டுவிட்டு விஜய் வாழ்த்தினார்' என்றார் ஜி.வி.

## இசை திறமைக்கு வாய்ப்பு

நாக் ஸ்டுடியோஸ் சோனி மியூசிக்குடன் இணைந்து தி மெட்ராஸ் கிக் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது. சுய இசைக் குழுக்களும், சுய இசை அமைப்பாளர்களும் இதன்மூலம் தங்கள் திறமையை வெளிப்படுத்தலாம். புதிய திறமைகளைக் கண்டறியும் நோக்கத்தில் உருவான இந்த அமைப்பை இசை அமைப்பாளர் அனிருத், பாடலாசிரியர் மதன் கார்க்கி தொடங்கி வைத்தனர்.

## இவன் யாரென்று தெரிகிறதா

- விமர்சனம்

**நடிப்பு:** விஷ்ணு, வர்ஷா, இஷாரா, ஜெயப்பிரகாஷ், அர்ஜுன், ராஜ்குமார், அருள்தாஸ்.
**ஒளிப்பதிவு:** பி அன்ட் ஜி
**இசை:** என்.ஆர்.ரகுநந்தன்
**தயாரிப்பு:** ஓன் சினிமாஸ்
**இயக்கம்:** எஸ்.டி.சுரேஷ்குமார்

படித்துவிட்டு வேலையில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கும் விஷ்ணுவுக்கு அர்ஜுனும், ராஜ்குமாரும் நண்பர்கள். காதல் தொடர்பான சின்ன மோதலில், 'நான் ஒரு சூப்பர் ஃபிகரை பிக்கப் செய்து, லவ் பண்ணி காட்றேன்' என்று நண்பர்களிடம் சவால் விடுகிறார் விஷ்ணு. பிறகு பல பெண்களை ஃபாலோ செய்து பல்பு வாங்கி, கடைசியாக வர்ஷாவை கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார். வர்ஷா போலீஸ் இன்ஸ்பெக்டர். காதல் கனிந்து வரும் நேரத்தில், விஷ்ணுவின் பழைய காதல் வேட்டை ஒவ்வொன்றாக வர்ஷாவுக்குத் தெரியவர, செம கடுப்பாகிறார். இந்தக் காதலாவது விஷ்ணுவுக்குக் கைகூடியதா என்பது கிளைமாக்ஸ்.

இளைஞர்களைக் கவர்ந்திழுத்து, சிரிக்க வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் படத்தை இயக்கியுள்ளார், சுரேஷ்குமார். அதனால், லாஜிக் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. காட்சிக்குக் காட்சி சிரிக்க வைத்துள்ள அவர், காதலில் மட்டும் சறுக்கி விழுந்திருக்கிறார். ஒரு பொறுப்புள்ள போலீஸ் அதிகாரிக்கு, வேலை வெட்டியில்லாதவன் மீது எப்படி காதல் வரும் என்பதில் தொடங்கி, என்னதான் மனைவி வாயாடியாக இருந்தாலும், மனைவி கடத்தப்பட்டதைக் கேட்டு கணவன் சிரிப்பது வரையிலான காட்சிகள் பலவற்றில் லாஜிக்கை மீறி, படத்தைக் காமெடியாக நகர்த்தி இருக்கிறார்.

வேலையில்லாத இளைஞன் கேரக்டருக்கு விஷ்ணு கச்சிதம். அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு, அருமையாகச் சிரிக்க வைக்கிறார். அவரது நண்பர்களாக வரும் அர்ஜுனும், ராஜ்குமாரும் அதற்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். ஒரு பெண்ணைக் காதலிப்பதற்கு அவர்கள் படும்பாடு நான்-ஸ்டாப் காமெடி. வர்ஷா போலீஸ் அதிகாரி கேரக்டருக்குப் பொருத்தமாக இல்லை.

கிளைமாக்சில் வரும் அருள்தாஸ், பக்ஸ், ராம்ஸ் கடத்தல் கூட்டணி, செம காமெடி கூட்டணி. தோற்றத்தில் டெரராகவும், செயலில் காமெடி பீசாகவும் வந்து கலக்குகிறார்கள். சீரியசாகவே நடித்து வரும் ஜெயப்பிரகாஷ், இதில் காமெடி செய்திருப்பது ரசிக்கலாம். லாஜிக் ஓட்டைகள் இருந்தாலும், காமெடியால் கவனம் ஈர்க்கிறது படம்.

**- தினகரன் விமர்சனக்குழு**




# எளிதாக்கப்பட்ட மாறும்முறை

1 NATION 1 TAX 1 MARKET GST




## சரக்கு மற்றும் சேவைவரி 1 ஜூலை, 2017 முதல் அமலாகிறது

### புதிய வரி நிர்வாகத்திற்கு எப்படி மாறுவது என்று நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

சரக்கு மற்றும் சேவைவரி நிர்வாகத்தில் வரி கீழ்ப்படிவை எளிதாக்குதல் மேலும் வர்த்தகத்தை எளிதாக நடத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தும் கொள்கை பண்புடன், சரக்கு மற்றும் சேவைவரி வரி நிர்வாகத்துக்கு மாறும் நடைமுறையும் எளிதாகவும் இலகுவாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. மாறும்முறை செயல்பாடு 25 ஜூன் 2017 அன்று மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது மேலும் மூன்று மாதங்களுக்கு தொடரும்.

நடப்பு சட்டங்களின் கீழ் ஏற்கனவே பதிவுபெற்ற வரிசெலுத்துவோர்கள் தன்னிச்சையாக மாற்றப்படுவர், மேலும் கேட்கப்பட்ட கூடுதல் தகவல்களை அவர்கள் வழங்கிய பிறகு சரக்கு மற்றும் சேவைவரியின் கீழான அவர்தம் பதிவு உறுதி செய்யப்படும்.

| வரிசெலுத்துவோர் பிரிவு | நடவடிக்கைகள் | படிவம் |
|---|---|---|
| நடப்பு விதிமுறைகளின் கீழ் பதிவுபெற்று மேலும் ஒரு நடப்பு நிரந்தர கணக்கு எண் (PAN) வைத்திருப்போர். | ➢ தரவு தன்னிச்சையாக சரக்கு மற்றும் சேவைவரி முறைக்கு மாற்றப்படுதல் மேலும் ஒரு தற்காலிக அடையாளம் (PID) மற்றும் கடவுசொல் வழங்கப்படுதல். | படிவம் GST REG–25 |
| | ➢ மூன்று மாதங்களுக்குள் தகவல்களை அளிப்பதால் மாறும்முறை செயல்பாடு நிறைவேற்றப்படுதல். | படிவம் GST REG–26 |
| | ➢ GST REG–06 படிவத்தில் துறை மூலமான சரிபார்த்தல் மற்றும் ஏற்றல் அல்லது GST REG–29 படிவத்தில் சரக்கு மற்றும் சேவைவரி கீழ் பதிவு பெறுவதற்குட்படாதிருந்தால் பதிவை ரத்து செய்வதற்கான விண்ணப்பம். | படிவம் GST REG–06<br>படிவம் GST REG–29 |
| நடப்பு சட்டங்கள் கீழ் பதிவுபெற்று ஆனால் ஏதேனும் காரணத்தால் மாறதிருப்பவர்கள். | ➢ நிரந்தர கணக்கு எண், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் பொது இணையதளத்தில் விண்ணப்பித்தல். | படிவம் GST REG–01–ன் பகுதி A |
| | ➢ தற்காலிக மேற்கோள் எண் உருவாக்கி தெரிவிக்கப்படுதல். | |
| | ➢ முறையாக கையொப்பமிட்ட/சரிபார்க்கப்பட்ட விண்ணப்பத்தை மின்னணுமுறையில் சமர்ப்பித்தல்.<br>➢ GST REG–02 படிவத்தில் விண்ணப்பம் பெறப்பட்டதன் மீது ஒப்புகை வழங்குதல். | படிவம் GST REG–01–ன் பகுதி B |
| | ➢ GST REG–06 படிவத்தில் இறுதியாக வழங்குவதன் மூலம் விண்ணப்பம் சரிபார்த்தல் மற்றும் அனுமதித்தல். | |

### குறைந்த கீழ்ப்படிவு சுமைக்கான விதிவகை

வரிசெலுத்துவோர் மீது குறைந்த கீழ்ப்படிவு சுமைக்கான சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது மேலும் அரசு பின்வருவனவற்றை உருவாக்குவதன் மூலம் மேற்கொண்டு சுமையை குறைக்க பொறுப்பேற்றுள்ளது:–

- ➢ வசதி மையங்கள்
- ➢ ஜிஎஸ்டி பயிற்சியாளர்கள்
- ➢ ஜிஎஸ்டி வசதி வழங்குனர்கள்
- ➢ ரிட்டன் தாக்கலுக்கான வலைதளமற்ற பயன்பாடு
- ➢ பயன்பாட்டு இடையீடுகள்

### நீங்கள் உங்கள் சந்தேகங்களை கேட்கலாம்:

அ) ஜிஎஸ்டி உதவிமேஜை:
cbecmitra.helpdesk@icegate.gov.in; 1800 1200 232

ஆ) GSTN உதவிமேஜை:
helpdesk@gst.gov.in; 0120–4888999

இ) நீங்கள் டுவிட்டரில் உங்கள் சந்தேகங்களை டுவிட் செய்யலாம்
@askGST_GOI மற்றும் @askGSTech

davp 15502/13/0069/1718

**மேலும் விவரங்களுக்கு காண்க:**
http://www.cbec.gov.in/resources//htdocs–cbec/gst/regn–GST–onlineversion–07june2017.pdf

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI டுவிட் செய்யவும்

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் &
மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் வணிகவரித் துறைகள்
www.cbec.gov.in